10th September 1960]

Temporary establishment (Survey Department)

*605 *Q.*—SRI N. R. PALANISAMI (on behalf of SRI V. K. KOTHANDARAMAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state when the Government propose to revise the scales of pay of the temporary establishments of the Survey Department?

THE HON. SRI M. A. MANICKAVELU: The posts in the temporary establishment of the Survey and Land Records Department are on a fixed pay. The proposal to re-fix their pay is under consideration. Orders will be issued soon after the receipt of the Board's report which has been called for.

SRI R. SRINIVASA IYER: இந்த சர்வே டிபார்ட்மெண்ட் இரண்டு, மூன்று பார்ட்டியில் வேலை செய்கிறது. இதை டெம்பரவரி எஸ்டாபிளிஷ்மெண்ட் என்று தற்காலிகமாகவே 7 வருஷம், 10 வருஷமாக வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஐந்து வருஷத்திற்குமேல் அப்படி வேலை செய்கிறவர்களை பர்மனெண்ட் செய்ய உத்தேசம் உண்டா? ஏராளமான பேர்கள் சர்வே செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதனால் இந்த சர்வே எஸ்டாபிளிஷ்மெண்டையே பர்மனெண்ட் செய்வதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சம்பள கமிஷன் பர்மனெண்டாக இருப்பவர்களுக்கு இருக்கும் சம்பள வீதப்படியே டெம்பரவரியாக இருப்பவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. டெம்பரவரியாக இருப்பவர்களை பர்மனெண்ட் செய்யவேண்டும் என்ற பிரச்னை எழவேயில்லை.

SRI N. K. PALANISAMI: பத்து வருஷம் சர்வீசில் இருப்பவர்களை அவசியம் பர்மனெண்ட் செய்யவேண்டுமென்று சம்பள கமிஷன் சிபார்சு செய்திருக்கிறதே. இதில் மூன்றில் இரண்டு பங்கு அம்மாதிரி டெம்பரவரியாக இருக்கிறார்கள். உடனடியாக அவர்களைப் பர்மனெண்டு செய்வதற்கு சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

THE HON. SRI M. A. MANICKAVELU: எனக்குத் தெரிந்த வரை சம்பள கமிஷன் சொன்னது பர்மனெண்டாக இருப்பவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று இருக்கும் சம்பளத்தை டெம்பரவரியாக இருப்பவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது.

Adult Schools

*606 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்திலே நம் இராஜ்யத்தில் எத்தனை முதியோர் பள்ளிகள் இருந்தன?